திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விவசாயிகளை தொடாத வேளாண் திட்டங்கள்

First Published : 06 Sep 2010 09:59:01 AM IST
Last Updated : 06 Sep 2010 10:24:50 AM IST

காஞ்சிபுரம், செப். 5: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் அவர்களை முழுமையாகச் சென்று சேரவில்லை என்றும் இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் சேரும் விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

இதேபோல் பயறு சாகுபடி செய்ய இரண்டு புதிய திட்டங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்துக்கென | 1.94 கோடியும், ஆத்மா எனப்படும் திட்டத்தின் கீழ் | 79 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி விளக்கம் மற்றும் மானிய விலையில் ஜிப்சம் முதலியவை வழங்கப்படுகின்றன. ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சுற்றுலா அழைத்து செல்லுதல் பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பயறு வகைப் பயிர்களில் உற்பத்தி திறன் அதிகரிக்க நடப்பு ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் | 1.63 லட்சம் செலவில் தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் பயறு வகை உற்பத்தியை பெருக்க உதவிகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் | 43.352 லட்சத்தில் ஓங்கூர் நீர்வடிப்பகுதியைச் சேர்ந்த அச்சரப்பாக்கம், சித்தாமூர், லத்தூர் வட்டாரங்களில் நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. விதை மானியம் உள்ளிட்ட பல்வேறு வேளாண்மை நலத்திட்டங்களும் விவசாயிகளின் நலனுக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால், விவசாயிகளில் ஒரு சிலர் மட்டுமே அரசின் இதுபோன்ற திட்டங்களை தெரிந்து கொண்டு பயனடைகின்றனர். போதிய கல்வி அறிவு இல்லாமலும் சரியான தகவல் தொடர்புகள் இல்லாததாலும், கடைகோடியில் வசிக்கும் விவசாயிகளுக்கு இதுபோன்ற திட்டங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லை.

அவர்களுக்கு இத் திட்டங்கள் குறித்து விவசாயத்துறை அதிகாரிகள் நேரடியாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று வேளாண் ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலர் கே.நேருவிடம் கேட்டபோது அவர் கூறியது: விவசாயத்துறை மூலம் வழங்கப்படும் மானியங்கள் ஒரு குறிப்பிட்ட பணக்கரா விவசாயிகளுக்கு மட்டுமே சென்று சேருகிறது. விவசாயத்துறை அலுவலர்கள் அலுவலகத்தில் பணி செய்வதை விட்டுவிட்டு, விவசாயிகளை நாடி வர வேண்டும்.

விவசாயத்துறையில் வரும் மானியங்களின் விவரங்கள் குறித்து, கிராமங்களில் தகவல் பலகையில் எழுதி வைக்கும் நடைமுறை முன்னர் இருந்தது. இதன்மூலம் அதன் பலனை பெற விவசாயத்துறை அலுவலகத்தை அணுகுவர்.

தற்போது இதுபோன்ற நடைமுறைகள் இல்லை. மானியம் ஒரு சிலருக்கே கிடைக்கிறது. பல விவசாயிகளுக்கு அந்த மானியம் குறித்தே தெரிவதில்லை என்றார்.

**சம்பா பருவத்தில் 85400 ஹெக்டாரில் நெல் சாகுபடி செய்ய திட்டம்**

First Published : 06 Sep 2010 09:58:39 AM IST

Last Updated : 06 Sep 2010 10:24:40 AM IST

காஞ்சிபுரம், செப். 5: காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் சம்பா பருவத்தில் 85400 ஹெக்டர் நெல் பயிர் செய்வதற்கான முயற்சிகளை எடுத்து வருவதாக காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குர் விஜயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் சொர்ணவாரி பருவத்தில் 18490 ஹெக்டர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் சம்பா பருவத்தில் 85400 ஹெக்டர் நெல்லும், நவரை பருவத்தில் 44,000 ஹெக்டர் நெல்லும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை தரக்கூடிய ரசாயன உரங்கள் 20795 மெட்ரிக் டன்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் 8155 மெட்ரிக் டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை துறையின் மூலம் நடப்பு ஆண்டில் சொர்ணாவாரி மற்றும் முன் சம்பா பருவத்தில் 307 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 90 கிலோ சிறுதானிய விதைகளும்,

8.237 மெட்ரிக் டன்கள் பயறு விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் 487.822 மெ.டன் நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

சிறுதானிய விதைகள் 382 கிலோ, பயறு விதைகள் 11.803 மெட்ரிக் டன்னும், எண்ணெய் வித்து விதைகள் 14.15 மெட்ரிக் டன்னும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்றார்.

**கருணைக்கிழங்கு விளைச்சல் குறையும்?**

ஆர். குழந்தைவடிவேல்

First Published : 06 Sep 2010 01:07:09 PM IST

திருக்காட்டுப்பள்ளி, செப். 5: தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி பகுதிகளில் தரமற்ற கருணைக்கிழங்கு விதைகளை விதைத்ததால், விளைச்சல் 50 சதமாகக் குறையும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

திருக்காட்டுப்பள்ளி, நடுப்படுகை, வளப்பக்குடி உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் கருணைக்கிழங்கு பயிர் செய்யப்பட்டு வருகிறது. கருணைக்கிழங்கு ஆனி மாதம் விதைக்கப்பட்டு, கார்த்திகை அல்லது மார்கழி மாதத்தில் அறுவடை செய்யப்படும்.

இந்தப் பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைக் கருணைக்கிழங்கு புதுக்கோட்டை மாவட்டம் பாலக்குறிச்சி, வீராச்சிலை, செல்லக்குடி, பனையப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ | 25-க்கு வாங்கப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 750 கிலோ விதை பயன்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக ஓர் ஏக்கரில் 4,500 கிலோ விளைச்சல் கிடைக்கும்.

ஓர் ஏக்கர் சாகுபடிக்கு விதைக் கரணை சுமார் | 16,000, பாத்திகள் அமைக்க | 2000, உரச் செலவுகள் | 3,000 என மொத்தம் சுமார் | 21,000 செலவு செய்தாலும், | 50,000 வரை மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

ஆனால், நிழகாண்டு பயிர் விதைக்கப்பட்டு சுமார் 2 மாதங்களுக்கு மேலாகியும், பயிர் வளர்ச்சியின்றி, பச்சை கலந்த பழுப்பு நிறமாகக் காணப்படுகிறது.

இதுகுறித்து வளப்பகுடி விவசாயி சிவக்குமார் (35) கூறியது:

கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் கருணைக்கிழங்கு சாகுபடி அதிகம். கடந்த ஆண்டு ஒரு கிலோ கருணைக்கிழங்கு | 15 முதல் 20 வரை விற்பனை செய்யப்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக சுமார் | 55,000 வரை மகசூல் கிடைத்ததே இதற்குக் காரணம். ஆனால், தற்போது விதைக்கப்பட்டுள்ள விதைகள் தரமற்றவை எனத் தெரிய வருகிறது. சாதாரணமாக விதைத்த 3-வது மாதத்தில் சுமார் 2 அடி உயரம் வரை வளரக் கூடிய இந்தப் பயிர், சராசரியாக ஓரடி உயரம்கூட இதுவரை வளரவில்லை. இதனால், 50 சதம் வரையே விளைச்சல் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இதுகுறித்து தோட்டகலை அலுவலர்களிடம் கேட்டபோது யூரியா மற்றும் காம்ளக்ஸ் உரங்களை வேர்ப் பகுதிகளில் இடச் சொன்னார்கள். இருந்தும் பயிரின் பழுப்பு நிறம் மாறவில்லை என்றார் சிவக்குமார்.

**சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு 65% மானியம்**

First Published : 06 Sep 2010 01:58:22 PM IST

கோவில்பட்டி, ஆக. 26: நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்க 65 சதவிகித மானியம் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தூத்துக்குடி வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் ச.பாலசந்திரன் விடுத்துள்ள அறிக்கை:

கோவில்பட்டி, புதூர் மற்றும் விளாத்திகுளம் வட்டாரங்களில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் வைப்பாறு துணை வடிநிலப் பகுதியில் நிகழ் ஆண்டில் சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு 65 சதவிகித மானியம் வழங்கப்படும்.

சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பில் 50 முதல் 70 சதவிகிதம் வரை பாசன நீர் சேமிக்கப்படுகிறது. சேமித்த நீரைக் கொண்டு சாகுபடி பரப்பை அதிகரிக்கலாம். இந்த முறையில் நீர் பாய்ச்சும் நேரம், ஆள்களின் தேவை குறைவாகும்.

மேலும், களைகள் முளைப்பது கட்டுப்படுத்தப்படுகிறது. உரங்கள் மற்றும் மருந்துகளை பாசன நீரில் கலந்து நேரடியாக அளிக்க முடிகிறது. சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க அரசு மானியம் மட்டுமல்லாது வங்கிக் கடன் உதவியும் வழங்கப்படுகிறது.

பாசனப் பகுதிகளில் மழைநீரை சேமிக்கும் பொருட்டு பண்ணை குட்டைகள் அமைக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்ணைக் குட்டைகளில் சேமிக்கப்படும் மழை நீரினை கண்மாய்களில் நீர் இருப்பு இல்லாத போது பாசனத்திற்கு பயன்படுத்தலாம்.

கால்நடைகளின் தண்ணீர் தேவையினை இதன் மூலம் பூர்த்தி செய்யலாம். பண்ணை குட்டைகள் அமைக்க 90 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் கோவில்பட்டியில் எட்டையபுரம் சாலையில் உள்ள உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு பாய் நாற்றங்கால் செயல்விளக்கம்**

First Published : 06 Sep 2010 10:34:52 AM IST

திண்டிவனம், செப். 5: திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் உழவர் வயல் விழா மற்றும் பாய் நாற்றங்கால் அமைப்பதற்கான செயல்விளக்கம் நல்லாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ந.சாத்தையா கலந்துகொண்டு, பசுந்தாள் பயிர் சாகுபடி, செம்மைநெல் சாகுபடி, நெல்தரிசில் பயறு சாகுபடி பற்றி எடுத்துரைத்தார். மேலும் நெல் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு தேவையான இடுபொருள்களை வழங்கினார். மேலும் செம்மைநெல் சாகுபடியில் பாய்நாற்றாங்கால் அமைப்பது பற்றிய விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

உதவி பேராசிரியர் முனைவர் பிரபு வரவேற்றார். தைலாபுரம், ஆன்பாக்கம், கொடுர் கிராமங்களிலிருந்து சுமார் 45 முன்னோடி உழவர்களும், ஆதிபராசக்தி கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர். முன்னோடி உழவர் பழனி செம்மை நெல் சாகுபடியில் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். உழவர் சேதுராமன் நன்றி கூறினார்.

வரும் புதன்கிழமை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செம்மைநெல் சாகுபடியில் நாற்றங்கால் பயிற்சி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

தினமலர்

**சொட்டு நீர் பாசன முறை: விவசாயிகளுக்கு 65% மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,02:24 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர்வள நிலவள திட்டம் செயல்படுத்தும் பகுதி விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2010--&11ம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் கிருஷ்ணகிரி அணை வரையிலான பெண்ணையாறு வடிநிலப்பகுதி மற்றும் மார்கண்டேய நதி வடிநிலப்பகுதி ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் செயல்படுத்தப்படவுள்ளது. கீழ் பெண்ணையாறு வடிநிலப்பகுதியில் உள்ள கொடியாலம் அணைக்கட்டு, கெலவரப்பள்ளி நீர்தேக்கம் முதல் கிருஷ்ணகிரி அணை வரை உள்ள அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் நீர்பாசன பகுதிகளிலும் நீர்வடிப்பகுதிகளிலும் மற்றும் மார்கண்டேய நதி வடிநிலப்பகுதியில் உள்ள நாயக்கன் அணைக்கட்டு, சிகரலப்பள்ளி

அணைக்கட்டு, கொல்லப்பட்டி அணைக்கட்டு, பீமாண்டப்பள்ளி அணைக்கட்டு, சிங்கிரிப்பள்ளி அணைக்கட்டு, நாச்சிகுப்பம், தடதடா, தாசிரிப்பள்ளி அணைக்கட்டுகள், எட்டிப்பள்ளி ஏரி, பீமாண்டபள்ளி ஏரி, திம்மம்மாசெரு ஏரி ஆகியவற்றின் நீர்பாசன மற்றும் நீர் வடிப்பகுதிகளிலும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் அமைக்க 65 சதவீதம் மானியம் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

மானிய தொகை போக மீதமுள்ள விவசாயிகள் பங்களிப்பு தொகைக்கு வங்கி நிபந்தனைக்குட்பட்டு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத்தரப்படும். தகுதியுள்ள சூளகிரி, ஓசூர் வட்டார பெண்ணையாறு வடி நிலப்பகுதி விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னத்தூர் போஸ்ட், ஓசூர்' என்ற முகவரியில் அணுக வேண்டும். கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, காவேரிப்பட்டணம் வட்டார பெண்ணையாறு வடிநிலப்பகுதி விவசாயிகள் மற்றும் வேப்பனப்பள்ளி வட்டார மார்க்கண்டேய நதி வடிநிலப்பகுதி விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, மூன்றாவது குறுக்கு தெரு, கோ-ஆஃப்ரேடிவ் காலனி, கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும் அணுகி விண்ணப்பிக்கலாம்.

**சிறுபாக்கத்தில் கருணை கிழங்கு விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,22:24 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் பகுதியில் கானா கருணை கிழங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது. சிறுபாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள மங் களூர், மலையனூர், வடபாதி, சித்தேரி உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன விளைநிலங்களில் குறுகிய கால பயிர்களை விளைவித்து வருகின்றனர். இந்நிலையில் முன் எப்போதும் இல்லாத வகையில் விவசாயிகள் புதிய முயற்சியாக கானா மற்றும் புளி கருணை பயிரிட்டுள்ளனர்.
பத்து மாதம் வரை வளரும் இப்பயிருக்கு ரூ.20 ஆயிரம் செலவில் உரம், உழவு, களை எடுத்தல் உள்ளிட்ட செலவு செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 30 டன் வரை விளைச்சல் தரக் கூடிய கானா கருணை அறுவடை செய்தபின், பெங்களூரு, சென்னை போன்ற பகுதிகளுக்கு டன் 6 ஆயிரம் ரூபாய் முதல் 8 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கும். கருணை கிழங்கு அமோக விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நாவற்பழம் விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,22:19 IST

நடுவீரப்பட்டு : நடுவீரப்பட்டு அடுத்த குழந்தைக்குப்பம் கிராமத்தில் மருத்துவ குணம் கொண்டதும், விநாயகர் சதுர்த்திக்கு உகந்ததுமான நாவற்பழம் விளைச் சல் அமோகமாக உள்ளது.
பண்ருட்டி அடுத்த நடுவீரப்பட்டு அருகே உள்ள குழந்தைக்குப்பம் கிராமத்தில் நாவற்பழம் அதிகளவில் விளைந்துள்ளது. நாவற்பழத்தின் கொட்டைகளை காயவைத்து பொடி செய்து தினமும் காலையில் தண்ணீரில் கலந்து குடித்து வந்தால் சர்க்கரை நோய் குணமாகும் என்பதால், சீசனில் பழத்தை வாங்கி கொட்டைகளை காய வைத்து தூள் செய்து தேவைப்படும் போது உபயோகப்படுத்தி வருவதால் கிலோ 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
தற்போது கடலூர், புதுச்சேரி மற்றும் பண்ருட்டி சுற்று வட்டாரங்களை சேர்ந்த வியாபாரிகள் விநாயகர் சதுர்த்தி வியாபாரத்திற்காக போட்டி போட்டுக் கொண்டு விவசாயிகளிடம் முன்பணம் கொடுத்து வருவதால் கிலோ 120 ரூபாயாக விலை உயர்ந்துள்ளதால் குழந்தைக் குப்பம் கிராம விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நேரடி கொள்முதல் நிலையம் நெல் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,22:19 IST

நடுவீரப்பட்டு : சி.என்.பாளையத்தில் திறக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்க்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது.
பண்ருட்டி அடுத்த சி.என்.பாளையம் ஊராட்சியில் தமிழக அரசின் உத்தரவின்படி நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. இந்த கொள்முதல் நிலையத்திற்கு சி.என்.பாளையம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களது நிலங்களில் விளைந்த நெல்களை விற்பனை செய்ய வருவது அதிகரித்து வருகிறது. இங்கு குவிண்டால் சன்ன ரகம் 1100 ரூபாய், பொது ரகம் 1050 ரூபாய் விலை வழங்கப்படுகிறது. நெல்லுக்கு நியாயமான விலையும், உடனடி பணமும் கிடைப்பதால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி சரிவு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,03:13 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி பெரும் சரிவு கண்டுள்ளது.ஈரோடு மாவட்டம் பவானி, பெருந்துறை, அம்மாபேட்டை, அந்தியூர், அத்தாணி, சத்தி உள்ளிட்ட பல இடங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. பருத்தி பயிரிட்ட விவசாயிகள், அறுவடை செய்த பருத்தியை அந்தியூர் மற்றும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு விற்பனைக்கு கொண்டு சேர்க்கின்றனர். கோவை, பெருந்துறை, திருப்பூர், கோபி, அன்னூர் உட்பட பல ஊர்களிலிருந்து வியாபாரிகள் பருத்தி ஏலத்தில் கலந்து கொள்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மாசி மாத இறுதியில், பெருவாரியாக, ஐந்தாம் நம்பர், சுரபி, பி.டி,, காட்டன் ரக பருத்தி மட்டும் அதிகளவில் பயிரிடுகின்றனர். அதிலும், பீரிடு ரகத்திலான விதையின் மூலம், அதிகளவு மகசூல் பெற முடியும் என்பதால், மவுசு அதிகம். பருத்தியிலிருந்து எடுக்கப்படும் இழைகள் மூலமாக காட்டன் துணி வகைகளும், பிரிக்கப்பட்ட விதைகளை மீண்டும் பதப்படுத்தி விற்கவும், எண்ணெயும் தயாரிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களால், பருத்தி பயிரிடுவதை விவசாயிகள் மறந்தே போயினர். காரணம், குலை குலையாக தள்ளிய பருத்தி செடியை கோடை காற்றும், மழையும் துவம்சம் செய்து விடுகிறது. இதனால், செடியிலிருக்கும் காய்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து, முதலுக்கே மோசம் விளைகிறது.மேலும், செடி வளரவும், காய் பிடிப்பதற்கும் இடையூறாக மாவுப்பூச்சி தொல்லை அதிகரிக்கிறது. இவைகளையெல்லாம் தாண்டி, அறுவடைக்கு வரும் பருத்தியை விற்பனைக்கு கொண்டு சேர்த்தாலும் விலை பிரச்னையை தீர்க்க முடியாததாக இருந்தது.

ஒரு கிலோ பருத்தி விலை 20 ரூபாயிலிருந்து 28 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. இதனால், சென்றாண்டு பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு இயற்கை ஒரு புறமும், மாவுப்பூச்சி ஒரு புறமும், விலை குறைவு இன்னொரு புறமுமாக மும்முனை தாக்குதல் நடத்தியதால், விவசாயிகள் அனைவரும் நசுக்கப்பட்டனர்.பருத்தி பயிரிட கிடங்கு அமைத்து, விதை ஊன்றி, பயிர் வளர்வதற்கு அடி உரம் சேர்த்து, களையெடுத்து என பல வேலைகளுக்கும் ஆன செலவை, அறுவடை மூலம் ஈடு செய்ய முடியாமல் விவசாயிகள் நஷ்டத்தில் தள்ளப்பட்டனர். பருத்தி பயிரிடுவதால் லாபம் பார்க்க முடியாது என, கருதிய பெரும்பாலான விவசாயிகள், நிலத்தில் பயிர்

செய்யாமலே விட்டு விட்டனர். இதனால், ஈரோடு மாவட்டத்தின் பருத்தி பயிரிடும் சதவீதம் குறைந்து போனது.

மேலும், விவசாய கூலி வேலை செய்ய ஆட்கள் கிடைக்காததும், பின்னடைவுக்கு பெரும் காரணமாக அமைந்து விட்டது.பருத்தி பயிரிடுவதை நிறுத்திய விவசாயிகளில் பலர் மஞ்சளுக்கு மாறிவிட்ட நிலையிலும், ஒரு சில விவசாயிகள் பருத்தி பயிரிடுவதை தொடர்ந்தனர். பருத்தி உற்பத்தி குறைந்து போனதால், நடப்பாண்டு பருத்தி விலை நல்ல முன்னேற்றம் இருந்தது. ஒரு கிலோ பருத்தி விலை 41 ரூபாய் வரையில் அதிகபட்சமாக விலை போனது. இதே ரீதியில் அடுத்தாண்டும் நிலையான விலை இருக்கும் பட்சத்தில், உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கூடுதல் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,03:24 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் போல கூடுதல் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல்போக நெல் அறுவடை 15 நாட்களாக நடந்து வருகிறது. சென்றாண்டு கோபி வட்டாரத்தில் ஏழு இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. தற்போது, பாரியூர் நஞ்சகவுண்டன்பாளையம், அத்தாணி, ஒத்தக்குதிரை பகுதியில்தான் நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

கள்ளிப்பட்டி, காசிப்பாளையம், கூகலூர், டி.என்.பாளையம் பகுதிகளில் இருந்த அரசு நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை.கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் முதல்போக நெல்லை, விவசாயிகளை தேடிச் சென்று, வியாபாரிகள் நேரடியாக பெற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலும் முதல்போகத்தில் இட்லி குண்டு ரகம்தான் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். நடப்பு போகத்தில் ஏப்ரல் மாதம் இட்லி குண்டு ரக விதை நெல்லுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் சன்னரகம் நெல் அதிகளவில் பயிரிடப்பட்டது.

அறுவடை துவங்கியுள்ள நிலையில் கேரளா மற்றும் ஆந்திரா மாநிலத்துக்கு அதிகளவில் இட்லி குண்டு, ரக நெல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.மேலும், அரசு நெல்கொள்முதல் நிலையங்களில் ஒரு கிலோ குண்டு ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், வியாபாரிகள் 13 ரூபாய்

வரை விலை தருகின்றனர். கோபி வட்டாரத்தில் உள்ள அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு இட்லி குண்டு ரக நெல் வரத்து குறைந்து விட்டது.

சன்ன ரகத்துக்கு வெளிமார்க்கெட்டில் 10 ரூபாய்க்கும் குறைந்த விலையே கிடைப்பதாலும், அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் 11 ரூபாய் வழங்குவதாலும் விவசாயிகள் அதிகளவில், சன்ன ரகநெல்லை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். ஆனால், ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையங்களிலும் நாள்தோறும் மூன்று லட்சம் வரைதான் நெல்லை கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கீடு செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.இதனால், ஒரேநாளில் அதிகளவில் விவசாயிகள் நெல்லை கொண்டு செல்லும் போது, மறுநாள்தான் பணம் பட்டுவாடா செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் நெல் அறுவடை தீவிரம் அடைந்து வரும் நிலையில், சென்றாண்டைப் போல் கூடுதல் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தவும், நெல்லை கொள்முதல் செய்வதில் இலக்கு இல்லாமல் பணம் வழங்க கோரியும், விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.240 டன்கொள்முதல்கோபி பா.நஞ்சகவுண்டன்பாளையம் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் கடந்த மாதம் 16ம் தேதி முதல் நேற்று வரை 240 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 26 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வரை உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### 24 கிலோ எடை சேனைக் கிழங்கு;இயற்கை விவசாயத்தில் நிரூபணம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,01:30 IST

பந்தலூர்: இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்தால் நல்ல பயன் கிடைக்கும் என நிரூபித்திருக்கிறார் பந்தலூர் எருமாடு பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர். கடந்த பல்லாண்டுகளுக்கு முன்னால், வனப்பகுதிகளாக காணப்பட்ட நிலங்கள் பல, தற்போது விவசாய நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளன. விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை உரங்களும், மெல்ல, மெல்ல கைவிடப்பட்டு, ரசாயன உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் பலர் விரும்புகின்றனர். ரசாயன உரத்தை உபயோகிப்பதால், மண்ணின் இயற்கைத் தன்மை அழிந்து, தொடர்ந்து விவசாயம் மேற்கொள்ளும் போது, மகசூலும் பாதிக்கப்படுகிறது. விவசாயத்தில் இயற்கை உரத்தின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என, தோட்டக்கலைத் துறையினர் வலியுறுத்துகின்றனர்.

பந்தலூர் கையுன்னி, எருமாடு பகுதிகளில் உள்ள விவசாயிகள், இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனரர். எருமாடு அடுத்துள்ள சிறச்சால் பகுதியை சேர்ந்தவர் மாதவன்.
தேயிலை, காபி, குருமிளகு, வாழை, காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இவர், இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறார். தோட்டத்தில் உள்ள குப்பைக் குழிக்கு அருகில் சேனைக் கிழங்கு நடவு செய்துள்ளார்.
வீட்டு முற்றத்தில் சேகரிக்கும் குப்பை, தழைகளை உரமாக இட்டு பராமரித்ததால், செடியில் இருந்து, 24 கிலோ எடை கொண்ட ஒரு சேனைக் கிழங்கு விளைந்துள்ளது. மாதவன் கூறுகையில், ""சேனைக் கிழங்கு சாதாரணமாக 5 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். இயற்கை விவசாயத்தின் மூலம் விளைவிக்கப்பட்ட இந்த கிழங்கு, 24 கிலோ எடை கொண்டுள்ளது. அனைத்து விவசாயத்திலும் இயற்கை உரத்தை பயன்படுத்தினால், நல்ல பயனை பெறலாம்," என்றார்.

**தென்னையில் ஊடுபயிராக பயறு வகைகளை சாகுபடி செய்ய வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,23:45 IST

கம்பம் : தென்னையில் ஊடுபயிராக பயறு வகைகளை சாகுபடி செய்ய விவசாயத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குனர் ராமராஜ் கூறியதாவது; தென்னை மரங்களுக்கு இடையே இடைவெளி இருப்பதால், போதிய சூரிய வெளிச்சம் கிடைக்கும். ஊடுபயிர் சாகுபடிக்கு ஏற்ற சூழல் உள்ளது. ஊடுபயிர் சாகுபடி செய்வதால் களைகளை கட்டுப்படுத்தி இடைவெளியை முறையாக பயன்படுத்துதன் மூலம் விவசாயிகளுக்கு உபரி வருவாய் கிடைக்கும். இளவயது தென்னையின் ஊடுபயிர் நட்டதிலிருந்து 7 ஆண்டுகள் வரை மக்காச் சோளம், மஞ்சள், எள், காய்கறிகள் சர்க்கரைவள்ளிக்கிழங்கு, சோயாமொச்சை, சேனைக்கிழங்கு பயிரிடலாம்.

7 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை உள்ள தோப்புகளில் பசுந்தாள் உரப்பயிரான சணப்பு, பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்யலாம். இதனால் மண் வளம் கூடும். வளர்ந்த தென்னந்தோப்பின் ஊடுபயிர், 20 ஆண்டுகளுக்கு மேல் வயதுள்ள மரங்கள் உள்ள தோப்புகளில் கோகோ, மஞ்சள், வெண்டை, மரவள்ளி போன்ற பயிர் வகைகள் பயிரிடலாம். மேலும் ஊடு பயிர் செய்வதற்கு ஏற்ற பயறு வகைகளான பாசிப்பயறு, தட்டப்பயறு, உளுந்து, கொள்ளு ஆகிய பயறு வகைகள் மானிய விலையில் விவசாயத்துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் கம்பம் விவசாயத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்

## ஏக்கருக்கு ரூ.3000 செலுத்தினால் இயந்திரம் மூலம் பயிர் நடவு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 06,2010,21:55 IST

ராமநாதபுரம் : ஏக்கருக்கு 3000 ரூபாய் செலுத்தினால், இயந்திரம் மூலம் செம்மை நெல் சாகுபடிக்கான பயிர் நடவு செய்து தரப்படும். மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

பாலசுப்பிரமணியன் டி.ஆர்.ஓ., தலைமை வகித்து பேசியதாவது: மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் நுண்ணுயிர் பாசனத்திட்டத்தில் சேர்ந்து 65 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசனக்கருவிகள் வழங்கப்படுகிறது. விவசாய கிணறுகள் மின்இணைப்புகளுக்கு, சாதாரண வரிசையில் பதிவு செய்திருந்தால், முன் உரிமை அடிப்படையில் மட்டுமே மின் இணைப்பு வழங்கப்படும். துரிதமாக மின் இணைப்பு பெற விரும்புவோர், சுயநிதி திட்டத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

செம்மை நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு 3000 ரூபாய் செலுத்தினால், இயந்திரம் மூலம் பயிர் நடவு செய்து தரப்படும். அரசத்தூர் கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது, என்றார். வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி, வேளாண் உதவியாளர் சவுந்தரராஜன், வேளாண் துணை இயக்குனர்கள் ராஜேந்திரன், சக்திமோகன், சென்னை வேளாண் காப்பீடு கழக அலுவலர் காசிவேலு உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

*அக்டோபர் – ஜூலை மாத காலத்தில் உலக காபி ஏற்றுமதி 5.2 சதவீதம் சரிவு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*நடப்பு 2009–10–ஆம் காபி பருவத்தில் உலக அளவில் காபி ஏற்றுமதி 5.2 சதவீதம் சரிவடைந்துள்ளது. காபி பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் மாதம் வரை கணக்கிடப்படுகிறது. நடப்பு 2009–10–ஆம் காபி பருவத்தில் அக்டோபர் முதல் ஜூலை வரையிலான பத்து மாத காலத்தில் உலக அளவில் 7.85 கோடி மூட்டை காபி ஏற்றுமதியாகி உள்ளது.*

*சர்வதேச காபி அமைப்பு*

*சென்ற ஆண்டின் இதே காலத்தில் உலக அளவில் காபி ஏற்றுமதி 8.27 கோடி மூட்டைகளாக (ஒரு மூட்டை என்பது 60 கிலோ) இருந்தது என சர்வதேச காபி அமைப்பு (ஐ.சி.ஓ) தெரிவித்துள்ளது.*

*இருப்பினும், நடப்பு காபி பருவத்தில் இந்தியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள், மிக அதிக அளவில் உலகின் பல்வேறு நாடுகளுக்கு காபியை ஏற்றுமதி செய்துள்ளன. இருப்பினும், உலக அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணியிலுள்ள பிரேசில், வியட்நாம் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளின் காபி ஏற்றுமதி குறைந்துபோனதால்தான் சர்வதேச அளவில் காபி ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டதற்கு காரணம் என இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.*

*வியட்நாம்*

*உலக அளவில் காபி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தில் உள்ள வியட்நாம் நாடு, நடப்பு காபி பருவத்தில் ஜூலை மாதம் வரையிலுமாக 1.28 கோடி மூட்டை காபியை ஏற்றுமதி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தை விட 17.3 சதவீதம் (1.55 கோடி*

மூட்டைகள்) குறைவாகும்.

இதேபோன்று சர்வதேச அளவில் காபி ஏற்றுமதியில் முன்னணியிலுள்ள பிரேசில் நாட்டின் காபி ஏற்றுமதி இதே காலத்தில் 6.38 சதவீதம் சரிவடைந்து அதாவது 2.65 கோடி மூட்டைகள் என்ற அளவில் இருந்து 2.48 கோடி மூட்டைகளாக குறைந்துள்ளது.

கொலம்பியா நாட்டின் காபி ஏற்றுமதி 77.40 லட்சம் மூட்டைகளிலிருந்து 60.70 லட்சம் மூட்டைகளாக குறைந்துள்ளது.

இந்தியா


காபி ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தில் உள்ள இந்தோனேஷியா, நடப்பு காபி பருவத்தில் ஜூலை வரையிலுமாக 54.20 லட்சம் காபி மூட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 51.60 லட்சம் மூட்டைகளாக இருந்தது. ஆக, இந்நாட்டின் காபி ஏற்றுமதி சென்ற ஆண்டை விட நடப்பு ஆண்டில் மேம்பட்டுள்ளது.

இதேபோன்று இந்தியாவின் காபி ஏற்றுமதி, இதே காலத்தில் 25.20 லட்சம் மூட்டைகள் என்ற அளவிலிருந்து 50 சதவீதம் அதிகரித்து 37.90 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது.

நடப்பு 2009–10–ஆம் காபி பருவத்தில், சர்வதேச அளவில் காபி உற்பத்தி 12 கோடி மூட்டைகளாக இருக்கும் என சர்வதேச காபி அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. இது, சென்ற பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட 6.3 சதவீதம் குறைவானதாகும்.

உலக அளவில் அராபிகா மற்றும் ரோபஸ்டா ஆகிய இரண்டு வகை காபி தான் பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

**கரளா மற்றும் தமிழ்நாட்டில் தொடர் மழையால் கொப்பரை தேங்காய்க்கு பற்றாக்குறை**



பி.கே. கிருஷ்ணகுமார்

கொச்சி

தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.

நடப்பு ஆண்டில் இரண்டு மாநிலங்களிலும் பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கொப்பரை தேங்காய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் தேங்காய் எண்ணெயின் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேவைப்பாடு

நடப்பு ஆண்டில் கொப்பரைத் தேங்காய் உற்பத்தி 15 முதல் 20 சதவீதம் வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு 9 லட்சம் டன் கொப்பரைத் தேங்காய் தேவைப்படுகிறது. இதில் தமிழ்நாடு மற்றும் கேரளாவின் பங்களிப்பு 70 சதவீதம் ஆகும். மீதமுள்ள கொப்பரை ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பங்களிப்பாக உள்ளது. நாட்டின் மொத்த தேங்காய் எண்ணெய் உற்பத்தி சுமார் 5 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இதில் 50 சதவீத எண்ணெய் கேரளா மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த ஒரு சில மாதங்களாக உள்நாட்டில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை ரூ.50 என்ற அளவில் இருந்து வந்தது. இது, சென்ற ஜூன் மாதத்திலிருந்து ரூ.58–ஆக உயர்ந்துள்ளது. பொதுவாக, ஓணம் பண்டிகை காலத்தின்போது தேங்காய் எண்ணெயின் விலை உயரும். பிறகு விலை குறையும். ஆனால் இவ்வாண்டு இதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் தற்போது ரூ.59 என்ற அளவில் உள்ளது. அரசு அமைப்பான நாஃபெட், குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிக்கப்பட்ட பிறகு விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ கொப்பரையை ரூ.44.50–க்கு வாங்கி வந்தது. இதுவரை நாஃபெட் அமைப்பு சுமார் இரண்டு லட்சம் டன் கொப்பரையை கொள்முதல் செய்துள்ளது. ஆனால் தற்பொழுது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விலை உயர்ந்து வருகிறது.

தமிழ்நாடு மற்றும் கேரளாவின் மழைப்பொழிவால் கொப்பரைத் தேங்காய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றாலும், இதனால் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அவ்வாறு தேங்காய் உற்பத்தி அதிகரித்து கொப்பரைத் தேங்காய் வரத்து அதிகரிக்கும் நிலையில் தேங்காய் எண்ணெய் விலை தற்போதைய அளவிலிருந்து குறைய வாய்ப்புள்ளது என்றும் சந்தை வட்டாரத்தில் தெரிவித்தனர்.

கேரளா தவிர்த்த இதர மாநிலங்களில் தேங்காய் எண்ணெய் குளியல் மற்றும் சோப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில் தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்து வருவதால் சோப்பு தயாரிப்பு நிறுவனங்கள் பாமாயில் போன்ற குறைந்த விலை கொண்ட எண்ணெய் வகைகளை அதிக அளவில் கொள்முதல் செய்ய தொடங்கியுள்ளன. அதிக அளவு பாமாயில் இறக்குமதி செய்யப்படுவதால் கேரளாவில் தேங்காய் எண்ணெய் பயன்பாடு குறைந்து போயுள்ளது. தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உற்பத்தியாகும் தேங்காய் எண்ணெய் வட மாநிலங்களுக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்படுகிறது. இவ்வாண்டு வட மாநிலங்களிலும் தேங்காய் எண்ணெய் பயன்பாடு குறையும் என்ற மதிப்பீடும் உள்ளது.

ஏற்றுமதி

*நாட்டின் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியும் சரிவடைந்துள்ளது. ஏனெனில் இந்தியாவில் இருந்து சர்வதேச நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ஒரு டன் தேங்காய் எண்ணெய் விலை 1000–1200 டாலர் என்ற அளவில் மிகவும் அதிகமாக உள்ளது. அதேசமயம் பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் ஒரு டன் தேங்காய் எண்ணெயை 950 டாலர் என்ற அளவில் ஏற்றுமதி செய்கின்றன. இதனால் பல நாடுகள் மேற்கண்ட நாடுகளிலிருந்து தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய விரும்புகின்றன. சென்ற ஆண்டு நம் நாட்டிலிருந்து 9,000 டன் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.*

***இயற்கை உரம் வாயிலான விளைபொருள்கள் விற்பனை 30 சதவீதம் அதிகரிக்கும்***

*இந்தியாவில் இயற்கை உரத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதனையடுத்து 2012–ஆம் ஆண்டுக்குள் இத்துறையில் 30 சதவீத வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*சர்வதேச அளவில் இயற்கை உரத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விளைபொருள் விற்பனை தற்போது ஆண்டிற்கு 20 சதவீதம் அதிகரித்து வரும் நிலையில், நம் நாட்டில் இந்த வளர்ச்சி 25 சதவீதமாக உள்ளது. வரும் 2012–ஆம் ஆண்டிற்குள் நம் நாட்டில், இயற்கை உரத்தை பயன்படுத்தி சாகுபடி செய்யும் பரப்பளவு 20 லட்சம் ஹெக்டேராக உயர்ந்து விடும். இது, மொத்த சாகுபடி பரப்பளவில் 1.5 சதவீதம் என்ற அளவில் இருக்கும்.*

*சென்ற 2009–ஆம் ஆண்டில் இயற்கை உர விளைபொருள்களின் விற்பனை மதிப்பு ரூ.450 கோடியாக இருந்தது. இது, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 788 சதவீதம் அதிகரித்து ரூ.4,000 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் உள்நாட்டு விற்பனை ரூ.1,500 கோடியாகவும், ஏற்றுமதி ரூ.2,500 கோடியாகவும் இருக்கும்.*

***வரத்து குறைந்தும் தேக்கம் அடையும் தேயிலை தூள் உற்பத்தியாளர்கள் கவலை***

*குன்னூர், செப்.7–*

*வரத்து குறைந்த போதி லும் தேயிலை தூள் தேக் கம் அடைவதால் உற் பத்தியாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.*

*60 ஆயிரம் சிறு விவசாயிகள்*

*நீலகிரி மாவட்டத்தின் முக்கிய விவசாய தொழிலாக தேயிலை தொழில் உள்ளது. தேயிலை விவசாயத்தை நம்பி சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் உள்ளனர். இவர்கள் தங்கள் தேயிலை தோட்டங்களில் பறிக்கப்படும் பச்சை தேயிலையை வாங்கும் தேயிலை தொழிற்சாலை என்று அழைக்கப்படும் சிறு தேயிலை தொழிற்சாலை களுக்கும், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும் வழங்கி வருகின்றனர்.*

*தேயிலை அன்னிய செல வாணி ஈட்டி தரும் ஏற்றுமதி பொருளாக உள்ளது. வட இந்தியாவில்*

அசாம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங் களிலும், தென்னிந்தியாவில் தமிழகம், கேரளா ஆகிய 6 மாநிலங்களிலும், கர்நாடகா வின் ஒரு பகுதியிலும் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

ஏற்றுமதி

தென்னிந்திய தேயிலையை ரஷ்யா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு நாடுகள் ஆகியவை வாங்குகின்றன. உள்நாட்டு தேவைக்காகவும் தேயிலை தூள் வாங்கப்படுகிறது. தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளான கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் தேயிலை தூள் உற்பத்தி அதிகரிக்கும்போது இந்திய தேயிலையின் ஏற்றுமதி கணிசமாக குறைவடைகிறது.

தென்னிந்திய தேயிலையில் குறிப்பாக நீலகிரி தேயிலையில் சி.டி.சி. ரக தேயிலையே அதிக அளவு உற்பத்தி செய்யப்படு கிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை தொழிற் சாலைகள் பெரும்பாலும் சி.டி.சி. ரக தேயிலை தூளையே உற்பத்தி செய்கின்றன.

மகசூல் பாதிப்பு

நீலகிரியில் கடந்த மாதங் களில் மழை சரிவர பெய்ய வில்லை. இதனால் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் எதிரொலி யாக தேயிலை தூள் உற்பத்தி யும் குறைந்து ஏல மையத்திற்கு குறைவான அளவு தேயிலை தூளே வருகிறது.

இந்த நிலையில் இந்த ஆண்டு குன்னூர் தேயிலை ஏல மையத்திற்கு வந்த தேயிலை தூளின் அளவுகளில் விற்பனை எண் 35–க்கான ஏலத்திற்கு வந்த தேயிலை தூளின் அளவு குறைந்ததாக இருந்தது. இந்த ஏலத்தில் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 2 ரூபாய் விலை உயர்ந்தது. ஆனால் 15 சதவீத தேயிலை தூள் விற்பனையா காமல் இருந்தது. உள்நாட்டு வர்த்தகர்கள் ஏலத்தில் அதிக அளவு பங்கேற்கவில்லை.விலை குறைவாகவே தேயிலை தூளை ஏலம் எடுப்பதற்கு காத்து இருந்தனர்.

தேக்கம்

தற்போது தேயிலை வரத்து குறைவாக உள்ளது. இந்த நிலையில் ஏலத்திற்கு வந்த அனைத்து தேயிலை தூளும் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்து இருப்பது தேயிலை உற்பத்தியாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து தேயிலை உற்பத்தியாளர்கள் சிலர் கூறியதாவது:–

மழை சரியாக பெய்யாததால் பச்சை தேயிலை மகசூல் குறைவடைந்து உள்ளது. இதனால் தொழிற்சாலை உற் பத்தி செய்யும் தேயிலை தூளிலும் குறைவு ஏற்பட்டு உள்ளது. ஏல மையத்திற்கு தற்போது குறைவான அளவு தேயிலை தூள் வருகிறது. பொதுவாக உற்பத்தி குறை வாக இருக்கும் போது ஏலத்திற்கு வரும் தேயிலை தூள் அனைத்தும் விற்பனை யாகி விலை உயரும்.

ஆனால் கடந்த ஏலத்தில் 2 ரூபாய் விலை உயர்ந்த போதி லும் 15 சதவீதமும் விற்பனை யாகாதது ஏமாற்றம் அளித்து உள்ளது. அனைத்து தேயிலை தூளும் விற்பனை யாகி இருந்தால் வருமானம் உயர வாய்ப்பு உள்ளது. இதனால் பச்சை தேயிலைக்கு கூடுதலாக விலை கொடுக்க முடியும்.

*ஏலத்தில் தேயிலை தூள் தேக்கம் அடைந்து இருப்பது கவலை அளிக்கிறது. இவ் வாறு அவர்கள் கூறினார்கள்.*

தினபூமி

**ஊட்டி உழவர் சந்தையில் ஆமை வடிவிலான உருளைக்கிழங்கு**

**ஊட்டி,** *செப்.7*

**ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில் இயங்கி வரும் உழவர் சந்தையில் ஊட்டி சுற்றுவட்டார..... பகுதி உட்பட சமவெளிப்பகுதியிலிருந்தும் விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் விளையும் காய்கறிகளைக் கொண்டு வந்து வியாபாரம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று ஊட்டி உழவர் சந்தைக்கு பிங்கர்போஸ்ட் பகுதியைச் சேர்ந்த விவசாயி கிருஷ்ணன், தனது தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த மலைக்காய்கறியான உருளைக்கிழங்கை அறுவடை செய்து உழவர் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தார். அதில் ஒரு கிலோ எடையுள்ள ஆமை வடிவிலான அதிசய உருளைக்கிழங்கு ஒன்று இருந்தது. இந்த அதிசய உருளைக்கிழங்கை உழவர் சந்தைக்கு காய்கறி வாங்க வந்த பொதுமக்கள் ஆச்சரியத்துடனும், அதிசயமாகவும் பார்த்து சென்றனர்.**

**அதேபோல் ஊட்டியருகேயுள்ள ஆலட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமமூர்த்தி தனது தோட்டத்தில் விளைந்திருந்த வெள்ளைக்கலர் முள்ளங்கியை ஊட்டி உழவர் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தார். அந்த முள்ளங்கிகள் ஒவ்வொன்றும் 3 கிலோ எடையுடன் யானையின் தந்தத்தைப் போன்று காட்சியளித்தது. இதனையும் பொதுமக்கள் கண்டு வியந்து சென்றனர்.**